முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS.31/2014 PW: 1 14 .06.2023**

2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 14 ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய சத்யா என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி .T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்யா | வயது | 37 |
| த/க/. பெயர் | செல்வம் | தொழில் | இல்லத்தரசி |
| ஜாதி | | கிராமம் | ராமநத்தம் |
| வட்டம் | | மாவட்டம் | |

**குறுக்கு விசாரணை** தொடர்ச்சி

5. சர்வே எண்.148/2 பி 74 செண்டு விஸ்திரணம் என்று தெரியுமா என்றால் தெரியாது . சர்வே எண் 148/3 பி 57 செண்டு விஸ்திரணம் என்று தெரியுமா என்றால் அளவு தெரியாது . 12.01.2012 லேயே சாந்தி , சேகர், அஞ்சுகம் சேர்ந்து 12.01.2012 ல் ஆதிமூலப் படையாச்சிக்கு கிரயம் கொடுத்தது தெரியுமா என்றால் தெரியாது . ஆனால் தற்போதும் சேகர் , சாந்தி, அஞ்சுகம்தான் அனுபவித்து வருகிறார்கள் . அதனை ஆதிமூலப் படையாச்சிதான் 2012 முதல் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

6. பெரியம்மாள் என்பவர் யார் என்றால் அழகப்ப படையாச்சியின் பெரிய மனைவி . அந்த ராமநத்தம் கிராம அயன் புஞ்சை சர்வே எண் . 79/3 பியில் 03.10.1996 ல் பெரியம்மாள் என்பவர் கிருஷ்ணன், ரமேஷ் ஆகியோரிடம் 1.75 ல் 525 சதுரடி கிரயம் வாங்கியுள்ளார் என்றாலும் அதனால் அது பெரியம்மாளுக்கு பாத்தியம் என்றாலும் தெரியவில்லை . அதில் உங்களுக்கு பாத்தியம் இல்லை என்றாலும் சரியல்ல . நாகம்மாள் எனது மாமியார் . எந்த காலத்திலும் நாகம்மாள் அழகப்ப படையாச்சியுடன் குடும்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாகம்மாளை அரங்கூரைச் சார்ந்த செல்லப்பெருமாள் என்பவருக்கு திருமணம் செய்துக்கொடுத்தார்கள் என்றால் தெரியாது . தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
Tittagudi.